


30. 11. 2025

தலைப்புச் செய்திகள்

- காசி தமிழ் சங்கமம் வரும் 2ஆம் தேதி தொடங்கும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.
- நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது.
- தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த படிவங்கள் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் வரும் 11ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- டிட்வா புயல், வட தமிழகம் மற்றும் புதுச்சேரி கடல் பகுதியிலிருந்து 70 கிலோ மீட்டர் தொலைவில் தற்போது நிலவிவருவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ராஞ்சியில் தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்கிறது.

இனி விரிவான செய்திகள்

*************

மன்-கீ-பாத்

நாட்டின் வேளாண் துறை 357 மில்லியன் டன் உணவு தானிய உற்பத்தியுடன் வரலாற்று சாதனை படைத்துள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியின் மன் கீ பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 128ஆவது முறையாக இன்று உரையாற்றிய பிரதமர், கடந்த 10 ஆண்டுகளுக்கு முந்தைய நிலையுடன் ஒப்பிடுகையில் இது 100 மில்லியன் டன் கூடுதலாகும் என்றார்.

ஹைதராபாத்தில் மிகப்பெரிய விமான எஞ்சின் பழுது பராமரிப்பு நிலையம் திறக்கப்பட்டது,

INS மாஹே கப்பல் கடற்படையில் இணைக்கப்பட்டது,

Sky Root ஸ்டார்ட் அப் தனியார் விண்வெளி நிறுவன வளாகம் திறப்பு போன்றவை புதுமையான சிந்தனைகள், படைப்பாற்றல் திறன், இளையோரின் ஆற்றலை பறைசாற்றுவதாக எடுத்துரைத்தார்.

இந்திய கடற்படையில் INS மாஹே கப்பல் இணைக்கப்பட்டது ஒவ்வொரு இந்தியனையும் பெருமையடைய செய்வதாக மகிழ்ச்சி தெரிவித்த பிரதமர் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இந்த கப்பலின் சின்னம் கேரளத்தின் உருமிவாள் மற்றும் களரி பயட்டு போர் முறைகளை ஒத்திருப்பதாக குறிப்பிட்டார்.

உள்ளூர் பொருட்களின் பயன்பாட்டை வலியுறுத்திய அவர், நம் நாடு சுதேசி முறைக்கு திரும்புவதாகவும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

4ஆவது காசி சங்கமம் நிகழ்வு வரும் 2ஆம் தேதி காசி நமோ கட்டில் தொடங்க உள்ளதாக கூறிய அவர், இந்த ஆண்டு தமிழ் - தமிழ் கற்கலாம் என்ற சிறப்பான கருப்பொருளுடன் காசி சங்கமம் நடைபெறும் என்றார்.

தமிழ் மொழியின் மீது பற்றுகொண்ட அனைவருக்கும் காசி தமிழ் சங்கமம் ஒரு சிறப்பான தளமாக இருக்கும் என்று எடுத்துரைத்த பிரதமர் தமிழகத்திலிருந்து ஏராளமானோர் இந்நிகழ்வில் பங்கேற்பதை ஆர்வத்துடன் எதிர்நோக்கி இருப்பதாக எடுத்துரைத்தார்.

தமிழ் மொழியின் பெருமையை பிரதமர் தமிழில் எடுத்துரைத்தார்.

வாய்ஸ்

அண்மை கோவை பயணத்தின்போது இயற்கை வேளாண்மை சார்ந்த மாபெரும் மாநாட்டை தாம் பார்வையிட்டதாகவும், தென்னிந்தியாவில் இயற்கை வேளாண்மைக்கான சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

அறிவுசார் வல்லுநர்களும், இளையோரும், இயற்கை வேளாண்மையை பின்பற்றி வருவதாக பெருமிதம் தெரிவித்த பிரதமர், பூமித்தாயை பாதுகாப்பதில் இயற்கை வேளாண்மை முக்கிய பங்காற்றுவதாக குறிப்பிட்டார்.

இஸ்ரோ அண்மையில் நடத்திய ட்ரோன் போட்டியில் செவ்வாய் கிரகத்திற்கு இணையான ஈர்ப்பு விசை கொண்ட பரப்பில் இளையோர் ட்ரோனை இயக்கியது சிறப்பான முயற்சி என்றும் பாராட்டினார்.

இளைஞர்களின் இத்தகைய அர்ப்பணிப்பு நிகழ்வுகள் வளர்ச்சி அடைந்த பாரத பாதைக்கு வலுசேர்ப்பதாகவும் அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளை இந்தியா ஏற்று நடத்துவதாக வெளியான அறிவிப்பு உலகளாவிய விளையாட்டுத்துறையில் நம் நாட்டின் பெருமையை பறைசாற்றுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய சாதனைகள் நம் நாட்டிற்கும், மக்களுக்கும், பெருமை சேர்ப்பதாக கூறிய அவர், பல்வேறு சாதனைகள் இம்மாதம் நிகழ்த்தப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

கடந்த 26ஆம் தேதி அரசியல் அமைப்பு சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தின கொண்டாட்டங்கள், வந்தேமாதரத்தின் 150ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி தேசம் தழுவிய சிறப்பு நிகழ்ச்சிகள், அயோத்தியாவில் கொடியேற்றவிழா, குருக்ஷேத்ராவில் பஞ்சன்ய நினைவகம் திறப்பு, போன்றவற்றையும் பிரதமர் எடுத்துரைத்தார்.

2025ஆம் ஆண்டு விளையாட்டுத்துறையின் வெற்றியை எடுத்துரைத்த பிரதமர்,

ஐ.சி.சி மகளிர் உலக கோப்பை வெற்றி,

deaflympics போட்டியில் 20 பதக்கங்களை இந்தியா வென்றது,

உலக கபடி போட்டியில் இந்திய மகளிர் அணியின் வெற்றி,

உலக குத்துசண்டை போட்டியில் 20 பதக்கங்கள் குவிப்பு,

பார்வையற்றோருக்கான உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் அனைத்திலும் இந்தியா வெற்றியை குவித்தது போன்றவற்றை பிரதமர் பெருமிதத்துடன் சுட்டிக்காட்டினார்.

குளிர்கால சுற்றுலாவிற்கான அனைத்து சாத்திய கூறுகளையும் நம் நாடு கொண்டிருப்பதை எடுத்துரைத்த பிரதமர், உத்திரகாண்ட் மாநிலத்தின் பல்வேறு சுற்றுலா தளங்கள் மக்களை பெருமளவு ஈர்த்துள்ளதாக குறிப்பிட்டார்.

இன்னும்சில வாரங்களில் உத்திரகாண்டில் குளிர்கால போட்டிகள் தொடங்க இருப்பதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

நாட்டு மக்களின் சாதனைகளை கொண்டாட மனதின் குரல் நிகழ்ச்சி ஒரு சிறப்பாக தளமாக இருப்பதாக கூறிய பிரதமர், இந்நிகழ்வின் மூலம் ஒட்டுமொத்த மக்களின் ஒருங்கிணைந்த முயற்சிகளை முன்வைக்க முடிவதாகவும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

*************

குளிர்கால கூட்டத்தொடர்

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நாளை தொடங்க உள்ள நிலையில் மத்திய அரசு அழைப்பு விடுத்த அனைத்து கட்சி கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் குளிர்கால கூட்டத்தொடரை சுமூகமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் நடத்த எதிர்கட்சிகளின் ஒத்துழைப்பு கோரப்பட்டது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண்ரிஜிஜூ,

மாநிலங்களவையின் அவைத்தலைவர் திரு.ஜே.பி.நட்டா,

நாடாளுமன்ற விவகாரத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்,முருகன்,

திரு.அர்ஜூன்ராம் மெஹ்வால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

காங்கிரஸ் கட்சியின் திரு.கவ்ரவ் கோகோய்,

திமுகவின் திரு. திருச்சி சிவா

திரிணாமுல் காங்கிரஸின் திரு.டெரக் ஓபரெய்ன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

நாளை தொடங்கி வரும் 19ஆம் தேதிவரை நடைபெறும் இக்கூட்டத்தொடரில் அணுசக்தி மசோதா 2025, காப்பீட்டு சட்ட திருத்த மசோதா, தேசிய நெடுஞ்சாலை சட்ட திருத்த மசோதா உள்ளிட்ட பல்வேறு முக்கிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட உள்ளன.

*************

வாக்காளர் பட்டியல்

தமிழகம் கேரளம் உள்ளிட்ட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர

திருத்த படிவங்கள் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் வரும் 11ஆம் தேதி வரை நீட்டித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி வரைவு வாக்காளர் பட்டியல் வரும் டிசம்பர் 16ஆம் தேதியும்,

இறுதி வாக்காளர் பட்டியல் வரும் பிப்ரவரி 14ஆம் தேதியும் வெளியிடப்படும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

உத்திரபிதேசம், சட்டிஸ்கட், கோவா, குஜராத், அந்தமான் நிக்கோர்பார் தீவுகள் லட்சதீவு, மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மேற்குவங்கம், புதுச்சேரி யூனியன் பிரதேசம் ஆகியவற்றிற்கும் இந்த அறிவிப்பு பொருந்தும்.

*************

வானிலை

வங்கடலில் நிலவும், டிட்வா புயல், வட தமிழகம் மற்றும் புதுச்சேரி கடல் பகுதியிலிருந்து 70 கிலோ மீட்டர் தொலைவில் தற்போது மையம் கொண்டுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 24 மணி நேரத்தில் வட தமிழகம் புதுச்சேரி கடல் பகுதிகளுக்கு அருகே, வடக்கு பகுதியில் நகரக்கூடும் என்றும், இன்றுமாலை வாக்கில் இக்கடல் பகுதிகளிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் நிலவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சென்னை, கடலூர், நாகை, எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி, காரைக்காலில் 5ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

பரவலாக தமிழக கடலோர பகுதிகளில் இன்று மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் ராணிப்பேட்டையில் இன்று அதி கன மழையும்,

சென்னை காஞ்சிபுரம் செங்கல்பட்டில் கன மழையும், பெய்யக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

*************

உதயநிதி ஸ்டாலின்

இதனிடையே சென்னையில் உள்ள மாநில பேரிடர் மேலாண்மை மையத்தை இன்று ஆய்வு செய்த துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தமிழகத்தின் அனைத்து நீர்நிலைகளிலும் 85 சதவிகித அளவிற்கு நீர் இருப்பு உள்ளதாக கூறினார்.

16 மாநில பேரிடர் மீட்பு படை குழுக்களும், 12 தேசிய பேரிடர் மீட்பு படை குழுவினரும் கடலோர பகுதிகளில் தயார்நிலையில் உள்ளதாக எடுத்துரைத்தார்.

தேவை ஏற்பட்டால் மேலும் 10 பேரிடர் படைகள் அனுப்ப படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாநிலத்தில் 20 ஆயிரம் ஹெக்டேர் வேளாண் நிலங்கள் நீரால் சூழப்பட்டிருப்பதாகவும்,

வெள்ள நீர் வடிந்த பின்னர் சேத விவரங்கள் கணக்கெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மழையால் பாதிக்கப்பட்டோருக்கு தலா 5 கிலோ அரிசி விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

நாளைவரை மழை நீடிக்கும் என்று வானிலை முன்னறிவிப்பு தெரிவிப்பதால் மக்கள் வீடுகளை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

*************

K.K.S.S.R

தமிழகத்தின் 38 புயல் நிவாரண மையங்களில் 2 ஆயிரத்து 393 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாக மாநில பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.K.K.S.S.R ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், புயல் பாதிக்க வாய்ப்புள்ள மாவட்ட நிர்வாகங்களுக்கு உரிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தூத்துக்குடி மற்றும் தஞ்சாவூரில் மழை காரணமாக சுவர் இடிந்து விழுந்ததில் இருவரும், மயிலாடுதுறையில் மின் தாக்கி ஒருவரும் உயிரிழந்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

வாய்ஸ்

*************

நாகை வாய்ஸ்

நாகை மாவட்டத்தில் புயல் பாதுகாப்பு மையங்களை ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

புயலை எதிர்கொள்ள அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

*************

செங்கல்பட்டு

இதனிடையே செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் கல்பாக்கம் சதுரங்கபட்டினம், பகுதிகளில் காற்றுடன் கூடிய மழை பெய்துவருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.

கடல் அதிக சீற்றத்துடன் காணப்படுவதால் மீனவர்கள் யாரும் கடலுக்குள் மீன்பிடிக்க செல்லவில்லை.

செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்பிடிப்பு பகுதிகளில் மழை அளவு குறைந்துள்ளதால் அணையிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் குறைக்கப்பட்டுள்ளது.

*************

கிரிக்கெட்

ராஞ்சியில் தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்யும் இந்தியா சற்றுமுன் 5 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 32 ரன் எடுத்திருந்தது.

யஷஷ்வி 18 ரன்னுக்கு ஆட்டமிழந்தார்.

ரோஹித் ஷர்மா மற்றும் விராட்கோலி தற்போது களத்தில் உள்ளனர்.

முன்னதாக டாஸ் வென்ற தென்னாப்பிரிக்கா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது